**செய்தி வெளியீட்டு எண்.105** **நாள்: 2.2.2011**

## மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்டு வரும் 3 வங்கிகள் மற்றும் 5 வங்கிக் கிளைகளுக்கான வங்கியாளர் விருது (2009–10) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் ஏற்படுத்தப்பட்ட கடன் இணைப்புகளால் அகில இந்திய அளவில் ஓர் முன்மாதிரியான மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. மகளிர் திட்டத்தின் கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 3 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் ஒரு சுய உதவிக் குழு உருவாக்கப்பட்டு ஆறு மாதங்களில் அந்தக் குழு தர மதிப்பீடு செய்யப்பட்டு சுழல் நிதி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பிற்காக முதல் முறையாக 2008–09ஆம் ஆண்டிலிருந்து இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் வங்கிகள் மிகப் பெரிய அளவில் கடனுதவிகளை கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் ரூபாய் 9 கோடியே 91 இலட்சத்து 84 ஆயிரம் வங்கிக் கடனாக வழங்கப்பட்டது.

சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்ட 1989ஆம் ஆண்டு முதல் 2005–06 நிதியாண்டு முடிய கடந்த 17 ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூபாய் 1 கோடியே 765 இலட்சத்து 24 ஆயிரம் மட்டுமே.

மேலும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் திட்டமானது முதன்முறையாக 2006ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசின் முழு நிதி ஒதுக்கீட்டிலிருந்து அனைத்து நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 3 இலட்சத்து 44 ஆயிரத்து 276 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 344 கோடியே 27 இலட்சம் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனாக மொத்தம் ரூபாய் 1818 கோடியே 79 இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர தமிழக அரசின் முயற்சியால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்தும் மறுசீரமைக்கப்பட்டு சுய உதவிக் குழுக்களின் நிலைத்தத் தன்மையினை மனதிற்கொண்டு இந்தியப் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஒரு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்கள் முடிவுற்ற பின்னர் தர மதிப்பீடு செய்யப்பட்டு, ரூபாய் ஒரு இலட்சம் அரசு நிதியாக அந்தக் கூட்டமைப்புகளுக்கு

வழங்கப்படுகிறது. இந்த நிதியானது குழுக்கள் மற்றும் கூட்டமைப்பின் இதர செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

2009ஆம் ஆண்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் இந்தக் கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனாக ரூபாய் 20 இலட்சம் முதல் ரூபாய் 50 இலட்சம் வரை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற்றுத் தரப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்குவதில் சிறப்பாக செயலாற்றிய வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் வங்கியாளர்களுக்கான விருதினை 2008–09ஆம் ஆண்டு தோற்றுவித்தது.

மாநில அளவில் சிறந்த மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும், மாவட்ட அளவில் ஒரு வங்கி மற்றும் மூன்று வங்கிக் கிளைகளுக்கும் இந்த விருதுகள் வழங்கப்படும். இவ்விருதுகள் சிறப்பாக செயல்படும் வங்கியாளர்களை மேலும் ஊக்கப்படுத்துவதோடு வங்கியாளர்கள் மத்தியில் ஆரோக்கியமான போட்டியையும் ஏற்படுத்தி வருகிறது.

2009–10ஆம் ஆண்டிற்கான சிறந்த வங்கி மற்றும் வங்கிக் கிளைகளாக மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகியவைகளுக்கு சிறந்த வங்கிகளுக்கான பாராட்டுச் சான்றிதழுடன் கூடிய விருதும், இந்தியன் வங்கி – தர்மபுரி மற்றும் இந்தியன் வங்கி மைக்ரோசாட் – 1 ஆகிய வங்கிக் கிளைகளுக்கு முறையே ரூபாய் 1 இலட்சம் மற்றும் ரூபாய் 75 ஆயிரம் காசோலையுடன் கூடிய விருதும், பாரத ஸ்டேட் வங்கி – மாரண்டஹள்ளி, பாரத ஸ்டேட் வங்கி – பாலக்கோடு மற்றும் இந்தியன் வங்கி – காவேரிப்பட்டிணம் ஆகிய வங்கிக் கிளைகளுக்கு முறையே ரூபாய் 1 இலட்சம், ரூபாய் 75 ஆயிரம் மற்றும் ரூபாய் 50 ஆயிரம் காசோலையுடன் கூடிய விருதும் இன்று (02.02.2011) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் புதிய தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.கா. அலாவுதீன், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் திரு. தீரஜ்குமார், இந்தியன் வங்கியின் முதன்மை மேலாண்மை இயக்குநர் திரு.டி.எம். பாஷின், செயல் இயக்குநர்கள் திரு.வி. ராம்கோபால், திரு. ராஜீவ் ரிஷி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எம். நரேந்திரா, பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் மற்றும் விருது பெறும் கிளைகளின் மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.